# கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam

விலை ரூபா 10.00

மலர்-05 ஜூன்-2012 இதழ்-56


## குறளமுதம்-56

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-6 அறத்துப்பால் வாழ்க்கைத்துணை**

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன்னை மணந்து கொண்டவனையும் கற்புத் தவறா தவாறு பேணி, தகுதியமைந்த புகழையும் காத்து, மனையறங்களிலும் தளர்ச்சி இல்லாதவளே (இல் லறத்திற்கு) சிறந்த பெண்.

### சுன்னாகம், மானிப்பாய், ப.தெ.வ.அ.கூ.சங்கங்களில்

# 40வது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்!

பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்க ளின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அங்கத்தவர்கள், பணி யாளர்கள் கௌரவிப்பு விழாவை சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் என்பன விமர்சையாக கொண்டா டியுள்ளன.

இவ்விழாக்களில் யாழ். மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன், பனை அபிவிருத்திச்சபைத் தலை வர் திரு பசுபதி சீவரத்தினம், வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத் தலைவர் திரு நா.கணேசன், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு இ.இராஜாராம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத் தியோகத்தர்கள்,ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் திரு ஏ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா), ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் வலிகாமம் அமைப்பாளர் திரு எஸ்.அன்பு, யாழ். மாவட்ட பனை தென்னை வ.அ.கூ.ச. பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு கா.சிவஞா னம் ஆகியோர் விருந்தினர்களா கக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் விருந்தினர் கள் உரைகளைத் தொடர்ந்து, அங்கத்தவர்கள், பணியாளர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது.

## தொழில் உபகரணங்கள் வழங்கல்!

வடமாகாண பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கங்களின் சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சங்க உறுப்பினர்க்ளின் தொழில் முயற் சிக்கு உதவும் நோக்கில் பனை அபிவிருத்திச் சபையினால் சுமார் 190 அங்கத்தவர்களுக்கு பனந் தொழில் உபகரணங்கள் வழங் கப்படவுள்ளன.

இவ் உபகரணம் வழங் கும் நடவடிக்கையின் ஒரு கட்ட மாக யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் நடைபெற்ற ஓர் நிகழ்வில் சமாசத் தலைவரிடம் சில உபகர ணங்கள் அடங்கிய பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய சங்க அங்கத்தவர்களு க்கான உபகரணங்கள் அவர்க ளுக்கு சமாசம் ஊடாக அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டது.

## மாதாந்த கலந்துரையாடல் நிகழ்வு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ங்களின் தலைவர். பொதுமுகா மையாளர்களுக்கான மாநாடு கடந்த மாதம் 21ம் திகதி சமாச மண்டபத்தில் நடைபெற்றது. இத ன்போது, வடமராட்சிக் கொத்த ணியின் வருடாந்தப் பொதுக் கூட் டம் எதிர்வரும் 28.06.2012லும், சித்த வைத்திய கூ.சங்கத்தின் பொதுக்கூட்டம் 10.07.2012லும் நட த்துவதெனவும் தீர்மானிக்கப்பட் டதுடன், வேலணை சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத் துவதற்கு முன்னேற்பாடாக 30.06.2012உடன் வாக்காளர் இடாப்பை மூடி, கிளைக்குழுத்

(8ம் பக்கம் பார்க்க)

## 6ம் மாத நினைவு தினம்

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபராகவும், கூட்டுறவுச் சபையின் செயலாளரா கவும், யாழ்மாவட்ட சி.க.கூ.ச.சமா சத்தின் தலைவராகவும், கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும் பதவி வகித்து அமரத்துவமடைந்த சு.சிவ சுப்பிரமணியம் அவர்களின் 6வது மாத நினைவுதின நிகழ்வு கடந்த 09.06.2012 சனிக்கிழமை காலை கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத் தில் நினைவுதின ஏற்பாட்டுக்குழுத் தலைவர் திரு பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கூட்டுறவாளர் கள் பலரும் கலந்துகொண்டிருந்த னர்.

## நன்றி தெரிவிப்பு!

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவினால்(வ.மா) கூட்டுறவுப் பணி யாளர்களுக்கு விசேட படி வழங்கு வதற்கான சுற்றுநிருபத்திற்கு அமை வாக கோண்டாவில் பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு, 5%, 15% விசேடபடி வழங்குவதற்கான அனும தியை கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் வழங்கியமைக்காகவும், அனுமதி பெறுவதற்கான தீர்மானத்தை மேற் கொண்ட பணிப்பாளர் சபைக்கும் சங்க ஊழியர்கள் உளமார்ந்த நன் றியை தெரிவித்துள்ளார்கள்.

**சிந்தனைத்துளி**

எல்லா முயற்சிகளும் சாதனைகளாகிவிடுவதில்லை. ஆனால் முயற்சிகளின்றி சாதனைகள் இல்லை. –அறிஞர்–

## கற்பகக்கரு

### வயிற்றில் அடிக்காதீர்!

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கள் விற்பனை நிலையங்களை நடத்துவதில் பல்வேறு தரப்பினராலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இத்தகைய சிரமங்களால் சங்க அங்கத்தவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலுக்கே முழுக்குப்போடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அங்கத்தவர்களது வாழ்வாதாரத்தை கூட்டுறவு வழிகளில் உயர்த்துவதற்கென சங்கங்கள் கள் விற்பனை நிலையங்களை தமது எல்லைப் பரப்பினுள் உள்ள கிராமப் புறங்களிலும், ஒதுக்குப்புறமான நகர்ப்புறங்களிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதி பெற்று விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் விற்பனை நிலையங்களை திறக்கும், பூட்டும் நேரங்களில் மது வரித்திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் என பல தரப்பட்டோராலும் கடுமையான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. கண்காணிப்பு அவசியமானதாக இருப்பினும் கெடுபிடிகள் இல்லாதிருப்பதை சம்பந்தப்பட்டவர்கள் உறுதி செய்யவேண்டும்.

கெடுபிடிகள் அதிகரிக்கும்போது சட்ட விரோத மது விற்பனை அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட இடமுண்டு. மத வழிபாட்டுத் தலங்களுக்கும் பாடசாலைகளுக்கும் அருகாமையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் கள் விற்பனை நிலையங்களை அமைக்க அனுமதி அளிக்க மறுக்கும் அதிகாரிகள், தனியார் மது விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கி வருவது ஏனோவென்று தெரியவில்லை.

இச்சந்தர்ப்பத்தில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நாடாளுமன்றத்தில் கலால் விசேட சரத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழான புதிய ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் ஆற்றிய உரையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

'கிராமங்களுக்கு சட்டவிரோத மதுபானத்தைத் தவிர வேறு தெரிவுகள் இல்லாதுள்ளது. அவர்கள் வசிக்கும் பகுதிகளில் சட்டபூர்வமான மதுபான நிலையங்கள் இல்லாததால் சட்டவிரோதமான மதுபான நிலையங்களை அவர்கள் நாடுகிறார்கள். சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் "கசிப்பு" பாவனையில் இருந்து விடுபட இது உதவும். எனவே சாதாரண மக்கள் கடும் உழைப்பின் பின்னர், மது அருந்துவதற்கு கிராம மட்டத்தில் மதுபான நிலையங்கள் திறக்க வேண்டும்' என்ற அமைச்சரின் கூற்றை அதிகாரிகள் தமது விருப்பு வெறுப்புக்கிடமின்றி சிந்தனையில் நிலைநிறுத்திப் பார்க்க வேண்டும்.

எனவே, பனந்தொழிலையே நம்பி வாழும் பனந்தொழில் வல்லுநர்கள் தமது தொழிலை இழக்கும் அவலம் இருப்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவற்றுக்கு துணைபோகாது இருக்க வேண்டும் என பனந்தொழில் வல்லுநர் சார்பில் கற்பகம் விநயமாகக் கேட்டுக்கொள்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

# இலங்கையின் நீதிமன்ற அமைப்பு

## வரலாறு சார்ந்த அபிவிருத்தி 3

**05. பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள்.**

1953ம் பாராளுமன்றச் சிறப்புரிமைகள் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுபவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்தல்.

**06. அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள்.**

அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்றுதல் சார்பான அல்லது நிர்வாக விடயங்களில் ஏதாவதொரு அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருந்தால் அல்லது மீறப்படுவதற்கு ஏதுவாக இருப்பின் அது பற்றி விசாரணை செய்து தீர்ப்பளிக்கும்.

**07. சனாதிபதி தேர்தல் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்பு தொடர்பான தேர்தல் மனுவை விசாரிக்கும் அதிகாரங்கள்.**

சனாதிபதி தேர்தலில் அல்லது மக்கள் கருத்துக் கணிப்பில் நடைபெறும் முறையற்ற செயல்களுக்கெதிராக கொண்டுவரப்படும் தேர்தல் மனுவை விசாரணை செய்தல்.

**08. விசேட சந்தர்ப்பங்களில் 'WRIT' கட்டளைகள் வழங்குவதற்கான அதிகாரங்கள்.**

பாராளுமன்றத்தின் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படும் ஏதாவதொரு நிறுவனத்திற்கு, ஆணைக்குழுவுக்கு எதிராக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக **'WRIT'** கட்டளை வழங்குதல்.

**பிரதம நீதியரசர் உட்பட 11 நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்றம் கொழும்பில் மட்டும் கூட்டங்களை நடாத்துகிறது.**

### 2) மேன்முறையீட்டு நீதிமன்றம்

இலங்கையில் செயற்படும் இரண்டாவது உயர்ந்த நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றமாகும். மேன்முறையீட்டு நிதிமன்றத்துக்கு உரித்தான அதிகாரங்கள் 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் 138 தொடக்கம் 145 வரையிலான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விதிகளின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்படும் அதிகாரங்கள் மேன்முறையீட்டு நிதிமன்றத்திற்கு உரித்தானவையாகும்.

**01. மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்**

முதன்முறையாக நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளினால் விசாரணை செய்து முடிவுறும் வழக்குகளின் தீர்வு தொடர்பான மேன்முறையீடுகளை விசாரணை செய்து வருகிறது.

**02. திருத்தங்கள் கொண்டுவருவதற்கான நீதிமன்ற அதிகாரங்கள்**

முதலில் செல்லும் நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளினால் விசாரணை செய்து முடிவடையும் வழக்குகளின் தீர்ப்புக்கள் தொடர்பான திருத்தங்கள் மற்றும் முன்பிருந்த நிலைக்கு கொண்டுவரும் கட்டளைகள் வழங்குவதாகும். இதற்கு மேலதிகமாக முதலில் செல்லும் நீதிமன்றம் மற்றும் ஏனைய நியாய சபைகளின் அறிக்கைகளை கொண்டுவரச்செய்து பரிசீலிக்கும் அதிகாரங்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரியனவாகும்.

–வளரும்–

# "இன்றைய நவீன தொழில்நுட்பத்துக்கேற்ப எம்மை தயார்படுத்த வேண்டும்"

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 40வது ஆண்டினை நிறைவுசெய்துள்ளமையை முன்னிட்டு, இச்சங்கங்களின் ஆரம்பகால அங்கத்தவர்களாக இருந்து, சிறப்பாக செயற்பட்டு வந்தவர்களின் அனுபவங்களை கற்பகத்தில் பதிவு செய்வதற்காக அவர்களுடனான நேர்காணலை கற்பகக்குழு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவரான கதிரன் சின்னராசா அவர்களுடனான நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

**கேள்வி :** உங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.



**பதில் :** எனது பெயர் கதிரன் சின்னராசா, வயது 63, சித்தியம்புளியடி, தெல்லிப்பளை கிழக்கு எனும் முகவரியைச் சேர்ந்த நான், க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். எனக்கு 3 ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர். பெண்பிள்ளை ஆசிரியராகவும், ஒரு மகன் கிராம சேவையாளராகவும், மற்றைய மகன்களையும் கல்வியாளர்களாகவும் ஆக்கியுள்ளேன். இச்சங்கத்தில் ஆரம்பத்தில் குறுகியகாலம் பணியாளராக பணியாற்றி, பின்பு அங்கத்தவராக சேர்ந்து தொழில் செய்து வருகிறேன். பொருளாதார நிலையைப் பொறுத்தளவில் எனது குடும்பம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றது.

**கேள்வி :** இச்சங்கங்கள் உருவாகுவதற்கு முன்பும் உருவாக்கப்பட்ட பின்பும் இச்சமூகம் சார்ந்தவர்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி கூறமுடியுமா?

**பதில் :** ஆம், இச்சங்கங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மரவரி முறை இருந்துவந்தது. இதில் பணம் படைத்த முதலாளிமார்க ... ளு க்கே பனை தென்னை சார்ந்த உற்பத்திகளை வழங்கவேண்டிய ஒரு நிலை இருந்தது. இதன்போது உழைப்புக்கேற்ற ஊதியமோ தொழில் பாதுகாப்போ கிடைக்கவில்லை. ஆனால் 1972ம் ஆண்டு எமது சமூகத்தின் முன்னோடிகளாக இருந்தவர்களின் பெருமுயற்சியினால் இத்தொழில்சார்ந்த செயற்பாடுகள் கூட்டுறவு முறைக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர். இத்துறைசார்ந்தவர்களின் தொழில் பாதுகாப்பு, பொருளாதார நிலை மற்றும் நலன்கள் என்பன கிடைக்க ஆரம்பித்தன.

**கேள்வி:** எந்த ஆண்டில் நீங்கள் சங்கத்தில் இணைந்து கொண்டீர்கள்? அதன் பின்பு சங்கத்திற்கு நீங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கள் எவை?

**பதில் :** 1972ம் ஆண்டு எமது தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதும், பணியாளராக சிறிது காலம் பணியாற்றி, பின்னர் அங்கத்தவராக இணைந்து எனது பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றேன். அந்த வகையில் எனது சேவைக் காலத்தில் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு இசைந்து, விசுவாசமாக செயற்பட்டமையால் இச்சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், பின்னர் சங்கத் தலைவராகவும், வலிகாமம் கொத்தணியின் நிர்வாக உறுப்பினராகவும், சமாசப் பொதுச்சபை உறுப்பினராகவும், பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பதவிகளை வகித்துள்ள நான், தொடர்ந்தும் தெல்லிப்பளைச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து இச்சங்கங்களின் வளர்ச்சிக்கு பங்காற்றி ... வருகின்றேன்

**கேள்வி:** சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அங்கத்தவர்களுக்கான நலத்திட்டத்தில் ஒப்பீட்டளவில் சிறந்ததாக நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள்?

**பதில் :** எமது சங்கத்தால் பல நலத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக சேமிப்புத் திட்டம், கல்வி அபிவிருத்தித் திட்டம், பாலர்பாடசாலைச் சேவை, விபத்துக் கொடைத் திட்டம், விசேட தினங்களுக்கான கொடைத் திட்டம் (பொங்கல் பொதி) என்பவை செயற்படுத்தப்பட்டு வருகின்றபோதிலும், கல்விச் சேவைத் திட்டமே என்னை மிகவும கவர்ந்தது.

**நேர்காணல்: வ.சிவகுமார்**
**(சமாச கல்வி உத்தியோகத்தர்)**

**கேள்வி:** இக்கூட்டுறவு அமைப்பில் இணைந்ததனால் நீங்கள் அடைந்த நன்மைகள் பற்றி கூறமுடியுமா?

**பதில்:** இச்சங்கத்தில் நான் அங்கத்தவராக இணைந்து கொண்டமையால், முதலாளிமார்களின் சுரண்டல்களிலிருந்து விடுபட்டு, உழைப்புக்கேற்ற நியாயமான ஊதியத்தை பெற்றுக்கொண்டதுடன், தொழில் பாதுகாப்பும், கௌரவமும் கிடைக்கப்பெற்றதோடு, எமது குடும்பத்தின் பொருளாதாரமும் உயர்வடைந்ததனால் எனது பிள்ளைகளை கல்வியில் வளப்படுத்த முடிந்துள்ளது.

**கேள்வி:** அங்கத்தவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக உழைப்பதே கூட்டுறவின் நோக்கமாகும். இந்நோக்கத்தை உங்கள் சங்கம் அடைந்துள்ளதா?

(7ம் பக்கம் பார்க்க)



# தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சை–2012

## பயிற்சி வினாத்தாள்–5

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

### பகுதி-1

மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) வடமாகாணத்தின் தலைநகரம் எது?

i) யாழ்ப்பாணம் ii) கிளிநொச்சி iii) மன்னார் iv) வவுனியா

02) மின்னல் ஏற்படும் நேரங்களில் செய்யக்கூடாதது எது?

i) நித்திரை செய்தல் ii) கைத்தொலைபேசியில் கதைத்தல்

iii) பாடம் படித்தல் iv) உணவு சமைத்தல்

03) "மிகவும் வறியவர்" என்பதை விளக்கும் ஒரு இணைமொழி எது ?

i) அருமை பெருமை ii) ஏழை எளியவர் iii) இன்ப துன்பம் iv) அணை துணை

04) ஒரு பொருளில் தீப்பிடித்து விட்டால் முதலில் என்ன செய்வீர்?

i) தடியால் அடித்தல் ii) மண் அள்ளி எறிதல் iii) ஈரச்சாக்கால் மூடுதல் iv) தண்ணீர் ஊற்றுதல்

05) மாணவரின் அறிவுப் பசிக்கு வழிகாட்டுதல் ஆசிரியரின் முக்கிய பணியாகும். 'பணி' என்பதன் ஒத்தபொருள் தரும் சொல் எது?

i) உதவுதல் ii) கற்பித்தல் iii) கீழ்ப்படிதல் iv) கடமை

06) ஒரு சதுரத்தின் சுற்றளவு 88 cm எனின், அதன் நீளம் யாது?

I) 22cm ii) 11cm iii) 44cm iv) 88cm

07) 50க்கு முன்னுள்ள இலக்கத்தையும், பின்னுள்ள இலக்கத்தையும் உரோமன் எண் குறியில் எழுதுக?

i) LXXI, IL ii) XL, L iii) XLVIII, LII iv) XLIX. LI

08) வினோவின் தந்தை தனேஷின் தந்தைக்கு மகனாவார். வினோ தனேஷிற்கு என்ன உறவுமுறை?

i) சகோதரன் ii) மகன் iii) மச்சான் iv) மருமகன்

09) 750g வாழைப்பழம் ரூபா 45.00 எனின், 1kg 250g வாழைப்பழத்தின் விலை எவ்வளவு?

i) ரூ. 100.00 ii) ரூ. 65.00 iii) ரூ. 75.00 iv) ரூ. 125.00

10) பின்வரும் எண்கோலத்தின் இடைவெளியில் வரும் எண் யாது?

54 → 48 → 42
? → 30 → 36
18 → 12 → 06

i) 24 ii) 48
iii) 36 iv) 18

### பகுதி-2

பின்வரும் விளம்பரத்தை நன்கு வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**விளம்பரம்**

இதோ வெளிவந்து, விற்பனையாகின்றது! தரம் 05 புலமைப்பரிசில் வழிகாட்டி நூல். தரம் 5 மாணவர்களுக்காக புதிய பாடத்திட்டப்படி (கல்வியாண்டு 2011) அண்மையில் வெளிவந்த மிகச்சிறந்த நூல். ஆசிரியரின் தரம் 3, 4, 5 கைநூலைத் தழுவி எழுதப்பட்டது. தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம், 2வது மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் போன்ற பாடங்களைத் தழுவி எழுதப்பட்டது. 300 பக்கங்களையும் அழகிய அட்டைப் படத்தையும் கொண்டது. ஆசிரியர் பொன்.சண்முகம் B.Ed. இன்றே நாடுங்கள்! படித்துப் பயனடையுங்கள்! பரீட்சையில் சித்தியடையுங்கள்! விலை ரூபா 300.00 மட்டுமே! தொகையாக எடுப்பவர்களுக்கு 10% கழிவுண்டு. விநியோகஸ்தர்கள்- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி.

01) இவ்விளம்பரம் எந்நூலைப் பற்றியது?

02) இந்நூல் எந்தத் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக எழுதப்பட்டது?
03) இந்நூலை எழுதிய ஆசிரியர் யார்?
04) இதன் விலை என்ன?
05) இந்நூல் எத்தனை பக்கங்களைக் கொண்டது?
06) இந்நூலை எங்கெங்கு பெற்றுக்கொள்ளலாம்?
07) 'விற்பனையாகின்றது' என்ற சொல் உணர்த்தும் காலம் எது?
08) இந்நூலில் எந்தெந்த பாடங்களைக்கொண்ட வினாக்கொத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன?
09) கல்வியாண்டு என்பதை பிரித்து எழுதுக?
10) இவ்விளம்பரத்தில் காணப்படும் பெயர்ச்சொற்கள் 2 தருக?

**பொருத்தமான எதிர்ச்சொல் தருக?**

11) புதியது - ........................ 12) அண்மை- ........................

**பொருத்தமான ஒத்தசொல் தருக?**

13) ஆசிரியர் - ........................ 14) அழகு - ........................

15) இந்நூலைப் படிப்பவர்கள் எந்தப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறலாம்?

**பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்தைத் தருக?**

16) என்னைப் பாருங்கள்- ........................ 17) நான் விளையாட விரும்புகிறேன்-..............................

**பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தைத் தருக?**

18) Are you ready? - ........................ 19) I want to sing - ........................

**பின்வரும் சிங்கள சொற்களுக்குரிய கருத்தைத் தமிழில் தருக?**

20) மது சுதுபாட்டாய்- ........................ 21) மம யனவா - ........................

**பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய கருத்தை சிங்களத்தில் தருக?**

22) புத்தகம் வாசிக்கின்றேன்- ........................ 23) யானை-..................... 24) ஆடு - ........................

**விளையாட்டுப் போட்டியிலே பங்குபற்றிய 5 மாணவர்களின் புள்ளிகள் தரப்பட்டுள்ளன. அதை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

| *மாணவர் பெயர்:* | லக்ஷாயினி | தீபன் | ஆனந்தி | ஜெனோ | தரன் |
|---|---|---|---|---|---|
| *புள்ளிகள்:* | 80 | 75 | 85 | 95 | 70 |

25) இப்புள்ளித் திட்டத்தை வரைபுமூலம் தருக? 26) குறைந்த புள்ளி பெறும் மாணவன் யார்?
27) கூடிய புள்ளி பெறும் மாணவன் யார்? 28) 3ம் இடம் பெறும் மாணவி யார்?
29) தரன் 1ம் இடம்பெற இன்னும் எத்தனை புள்ளிகள் பெற வேண்டும்?
30) நாம் அனைவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமாயின் யாது செய்யவேண்டும்?

**கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

31) 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 29 நாட்களாகும். ( )
32) மூளைக் காய்ச்சல் விசர் நாய்க்கடியால் ஏற்படும். ( )
33) பத்திரிகை, வானொலி, தொலைபேசி என்பன தொடர்பாடல் ஊடகங்களாகும். ( )
34) வானில் சந்திரன் பூரணமாகத் தெரியும் நாளை பூரணை என்கிறோம். ( )
35) முஸ்லீம் சமயத்தவர்கள் கொண்டாடும் பெருநாள் 'ஹஜ்' ஆகும். ( )

**"நான் பறவையானால்...." எனும் தலைப்பில் உமது எண்ணங்களை 6 வாக்கியங்களுக்கு மட்டுப்படுத்தி (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்) எழுதுக.**

## வினாத்தாள் -4இற்கான விடைகள்

**பகுதி 1**

| | |
|---|---|
| 1) i | 6) iii |
| 2) ii | 7) iii |
| 3) iv | 8) iv |
| 4) iii | 9) i |
| 5) ii | 10) iv |

1) ரூபா 21,000
2) இருவர் (2)
3) 3 நாட்கள்
4) திங்கள், புதன், வெள்ளி
5) 4 நாட்கள்
6) 2 நாட்கள்
7) 2 நாட்கள்
8) திரு என்.மகேந்திரம்
9) பளை
10) ரூபா 5,000 கூடுதல்
11) சுநபளைவயச
12) ளுஉாழழட

**பகுதி 2**

13) ளுயடயசலஃயல
14) மாதம்
15) ஆசிரியர்
16) இந்தப் புத்தகம் யாருடையது?
17) வெண்கட்டி
18) சப்ப சனீப கொ ஹொமத
19) ஒயாகே வயச கீயத
20) செல்லம் கறனவா
21) 6, 1
22) 25
23) 45
24) 2
25) 9
26) விகடகவி
27) தமிழ் மக்களை
28) டி.எஸ்.சேனநாயக்க
29) 72
30) 14
31) (✓)
32) (✓)
33) (✓)
34) (✗)
35) (✓)

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்
# எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

பனை தென்னைசார் தொழில் வல்லுநர்கள் ஆரம்பத்தில் மரவரி முறையின் காரணமாக மிகவும் கஸ்ரப்பட்டார்கள். அவர்களுக்கான சமூக, பொருளாதார பாதுகாப்பு கிடைக்கப் பெறவில்லை. சமூக அந்தஸ்து கிடைக்கப்பெறவில்லை. தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை. இந்நிலையில் அவர்கள் மரணமடைந்தால் அவர் சார்ந்த குடும்பங்கள் நிர்க்கதியான நிலையை எதிர்நோக்கவேண்டியதாக இருந்தது.

இவ்வாறான ஒரு நிலையிலிருந்து இவர்களை மீட்பதற்காக என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த காலத்தில் கூட்டுறவு அமைப்புக்குள் இவர்களையும் உள்வாங்க முயற்சித்தமையால், 01.05.1972ல் கள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இருந்தும் ஆரம்பகாலத்தில் இச்சங்கங்கள் பின்வரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியவைகளாக இருந்தன.

01) அரசுக்கு செலுத்த வேண்டிய வரி 1976ம் ஆண்டுவரை செலுத்த முடியாமல் இருந்ததன் காரணமாக மரவரி முறைமையை மீண்டும் கொண்டுவரவேண்டுமென்ற முன்மொழிவுகள் இடம்பெற, சில பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீடுகளால் வரி 15% ஆகவும் பின்னர் 10% ஆகவும் குறைக்கப்பட்டு, சவாலை எதிர்கொண்டு சமாளிக்க முடிந்தது.

02) ஆரம்ப காலகட்டத்தில் மேலதிக உற்பத்திகளை (கள்ளினை) ஊற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் தொழிலாளர்கள் முழுமையான பயனைப் பெறமுடியாது திண்டாடினர். பின்னர் மேலதிக கள்ளினை சாராய உற்பத்திக்காகப் பயன்படுத்தும் வடிசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதனால் அச்சவால்களும் சமாளிக்கப்பட்டன.

இச்சங்கங்கள் கள் உற்பத்தியை மட்டுமின்றி, பிற பொருட்களையும் உற்பத்தி செய்தது. பனம் சீனி, கல்லாக்காரம் போன்றவற்றின் உற்பத்தியை மேற்கொண்டு இலாப மீட்டியபோதிலும், அரசாங்கத்தின் தாராளப் பொருளாதாரக் கொள்கை காரணமாக போதிய சந்தை வாய்ப்புகள் கிடைக்காது நட்டம் ஏற்பட்டமையால், மேற்படி உற்பத்திகள் நிறுத்தப்பட்டன.

இவ்வாறான சவால்களினால்,

01. இச்சங்கங்களின் அங்கத்தவர் வீதம் குறையத்தொடங்கின.
02. போதிய நிதி மூலதனம் என்பன காணப்படாமை.
03. கிளைகளை நவீனப்படுத்தி வியாபாரத்தை முன்னெடுக்க அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்கள், தடங்கல்கள்.
04. கல்வியறிவு போதியளவில் காணப்படாத இயக்குனர் சபை.
05. சமூக, பொருளாதார ரீதியில் ஒதுக்கப்பட்டமை.
06. சவால்களை எதிர்நோக்கும் வல்லமை வலு காணப்படாமை.
07. ஊழல்கள், மோசடிகளை கட்டுப்படுத்தும் திறனற்ற போக்கு.
08. உலகமயமாக்கலுக்கு ஈடு கொடுக்க முடியாமை.
09. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குள் உட்புகுந்துகொள்ளாமை.
10. காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப நவீன மயமாக்கலை மேற்கொள்ள முடியாமல் போனமை.

போன்ற பல்வேறு நெருக்கடிக்குள் இச்சங்கங்கள் சிக்கித் தவிக்கின்றன. இவ்வாறான சவால்களுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் அல்லது காணப்பட வேண்டும் என்பதை ஆராய்கையில் ,

01. அங்கத்தவர் பற்றாக்குறை நீக்கப்படல் வேண்டும்.
02. பொருத்தமான ஆலோசனைகள், அறிவுரைகள் போன்றவற்றை அதற்கேற்றவர்களிடமிருந்து பெற்று, அனுமதியினூடான செயற்பாடுகளை விரைவாகவும், திறமையாகவும் மேற்கொள்ளல்.
03. தொழில்சார் பயிற்சி, கல்வி வளர்ச்சி, சிக்கனம், சேமிப்பு, அபிவிருத்தி முயற்சி என்பவற்றில் அதிகூடிய கவனம் காட்டுதல்.
04. நவீனமயமாக்கல், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல், போதிய விளம்பரம் செய்தல்.
05. சங்கம் சார்ந்த அனைவரையும் பற்றுறுதி, விசுவாசம் மிக்கவர்களாக்கும் செயற்திட்டங்களை மேற்கொள்ளல்.
06. சங்கங்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கூட்டுறவுச் சட்டத்துக்குட்பட்டு உடனடியாகவும், விரைவாகவும், சரியாகவும் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
07. வியாபார நடவடிக்கைகளில் புதிய யுக்திகளை கையாண்டு, பாவனையாளர்களைக் கவரும் வகையில் அபிவிருத்தியை மேற்கொள்ளல்.

இவ்வாறாக சங்கங்கள் எதிர்நோக்கும் சவால்களை இனம்கண்டு தீர்வுகளை முன்வைத்து, நடைமுறைப்படுத்தப்படுமேயானால், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், அச்சங்கங்களைச் சார்ந்த கூட்டுறவாளர்களும் மிகப்பெரும் வளர்ச்சியுற்று, மேன்மைபெறுவர் என்பதில் சந்தேகமில்லை.

**சு.சிவலிங்கம்**
**கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும் சில வழிகள்....**

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவை அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்(Loose talk)
- எந்த விடயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள். விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள்.
- மற்றவர்களுக்கு மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் தொடக்க முன்வாருங்கள்.

# இன்றைய நவீன தொழில்.... 3ம் பக்கத் தொடர்ச்சி

**பதில்:** இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதனை இலக்காகக் கொண்டு எமது சங்கம் போத்தற்கள் உற்பத்தி, பனை வெல்ல உற்பத்தி என்பவற்றில் முன்மாதிரியாக செயற்பட்டு வந்த வேளையில், இதற்கு முற்பட்ட காலப் பகுதிகளில் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப் பெயர்கள், சொத்தழிவுகள் போன்ற நெருக்கடிகள் காரணமாக பாரிய பின்னடைவை எமது சங்கம் சந்திக்க நேர்ந்தமை இந்நோக்கத்தை அடையமுடியாமல் போனதற்கு ஒரு காரணமாக அமைந்தாலும், தற்போதைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப எமது உற்பத்திகளையும் செயற்பாடுகளையும் மாற்றிக்கொள்ளாமையும் ஒரு முக்கிய காரணமாக காணப்படுகின்றது. எனவே, இதனை கவனத்தில் எடுத்து செயற்படுவோமேயானால் எதிர் காலத்தில் இவ் இலக்கை அடைவதில் தடைகள் இருக்க முடியாது.

**கேள்வி:** கிராமிய வங்கியினால் நீங்கள் அடைந்த நன்மைகளை கூறுங்கள்.

**பதில்:** இவ் அமைப்பு முறை ப.நோ.கூ.சங்கங்களிலேயே ஆரம்பத்தில் இருந்து வந்தது. எமது சங்கங்களில் 2000ம் ஆண்டில் இக் கிராமிய வங்கி முறை செயற்படத் தொடங்கியது. இவ் வங்கியால் அங்கத்தவர்களின் சேமிப்புபழக்கம் அதிகரித்ததுடன், நியாயமான வட்டியும் கிடைத்ததுடன், அங்கத்தவர்கள் வங்கி நடைமுறை தொடர்பிலும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

**கேள்வி:** உங்கள் சங்கம் அங்கத்துவம் பெற்றுள்ள வலிகாமம் கொத்தணியால் மேற்கொள்ளப்பட்டுள்ள அங்கத்தவர்களுக்கான நலத்திட்டம் பற்றி கூறமுடியுமா?

**பதில்:** எமது கொத்தணி பல முன்மாதிரியான நலத்திட்டங்களை அங்கத்தவர்களுக்காக செயற்படுத்தி வருகின்றது. அங்கத்தவர் விபத்துக் கொடைத்திட்டம், மரணக் கொடைத்திட்டம் என்பவற்றுடன் தற்போது ஓய்வூதிய திட்டத்தையும் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதோடு, முன்கல்வி மாணவர்களுக்கான சத்துணவு, ஆசிரியர், மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல் திட்டம், கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல் திட்டம், சர்வதேச கூட்டுறவுதின விழாவின்போது அங்கத்தவர்களுக்கான போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் திட்டம் என்பவை சிறந்த பயனுடைய திட்டங்களாகும்.

**கேள்வி:** சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நலத்திட்டங்களினால் அங்கத்தவர்கள் அடையும் நன்மைகள் பற்றி....

**பதில்:** சமாசத்தின் ஓய்வூதிய திட்டத்தின்மூலம் அங்கத்தவர் தனது வயதான காலத்தில் ஓரளவு தனது தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் மாதாந்தம் ஓய்வூதியம் கிடைப்பது பயனுள்ள ஒரு விடயமாகும். மற்றும் விபத்து நிதி வழங்கல் திட்டத்தின்மூலம் அங்கத்தவர்கள் அவர்சார்ந்தவர்கள் பயன் பெறுவதுடன், கல்வி அபிவிருத்தித் திட்டத்தினால் எமது பிள்ளைகளின் கல்விச்செயற்பாடுகள் ஊக்கமடைவதற்கு நிதியுதவியும் பாடசாலை உபகரணங்களும் வழங்கி வருவதோடு, சிறந்த அங்கத்தவர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து வருடாந்தம் கௌரவிப்பதும், சர்வதேச கூட்டுறவுதினத்தில் அங்கத்தவர்களுக்கான போட்டிகளை நடத்தி, வெற்றிபெற்றோருக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிப்பதும் மகிழ்ச்சியானதே.

(8ம் பக்கம் பார்க்க)



## பாகற்காய்

மரக்கறி வகைகளில் ஒன்றான பாகற்காயை சிலர் தவிர்த்து வருகிறார்கள். அதன் குணநலன்களை அறியாதவர்களே இவர்கள். கசப்பானாலும் உடம்புக்கு மிகவும் நல்லது. பல நோய்களுக்கு நிவாரணியாக இருக்கிறது.

பாகற்காய் சாப்பிடுவதன்மூலம் மார்பக புற்றுநோய் வருவதைத் தடுக்க முடியும் என ஒரு ஆய்வு கூறுகிறது. உலகம் முழுவதும் மார்பக புற்றுநோய்க்கு பலியாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்கள் பாகற்காயை தமது உணவில் சேர்த்துக்கொண்டால் இந்த நோயிலிருந்து விடுபடலாம். பாகற்காய் கைக்கிறது என்றுதானே அதனை விலக்கி வைக்கிறார்கள் சிலர். அவ்வாறானவர்கள் தேங்காய் உடைத்ததும் வரும் இளநீரில் வெட்டிய பாகற்காயை சிறிது நேரம் ஊற விடவேண்டும். அல்லது உப்புப் போட்டு ஊறவைக்க வேண்டும். அப்போது அதிலுள்ள கைப்பு போய்விடும்.

பாகற்காய் பெரும்பாலும் உடலுக்கு நல்லது என்று எல்லோருக்கும் தெரியும். அறுசுவைகளில் எமது உடலுக்கு நலத்தைத் தரும் இந்தக் கசப்புச் சுவையிலான பாகற்காயை வாரத்தில் ஒருமுறையாவது உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. சிலர் பாகற்காயை கறியாகவோ, பொரித்தோ, சம்பல் போட்டோ சாப்பிடுவார்கள்.

நமது உணவு வகைகளில் உவர்ப்பு, கசப்பு, உறைப்பு, இனிப்பு என்பன சேர்ந்திருப்பது உடம்புக்கு நல்லது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் பாகற்காய் சாப்பிட்டால் மிகவும் நல்லது. அவர்கள் மட்டுமல்லாமல் காய்ச்சல், இருமல், இரைப்பு, மூலம், வயிற்றில் பூச்சித் தொல்லை இருப்பவர்களும் பாகற்காயை உண்ணலாம்.

பாகற்காய் நமது நாவுக்குத்தான் கசப்பே தவிர, உடலுக்கு இனிப்பானது. பாகற்காயைவிட, பாகல் இலையில் அதிக மருத்துவக் குணங்கள் உள்ளன. அதன் சாறு பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது. பாகலின் இலைகளை அரைத்து உடல்முழுவதும் பத்துப்போட்டால் சிரங்கு ஒழிந்துவிடும். இதே போல பாகற்சாறும் உடலுக்கு மிகவும் ஏற்றது. ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு விதத்தில் பாகல் இலையின் சாற்றைக் குடிக்க நோய் கட்டுப்படும்.

எனவே பாகலின் குணநலன்களை அறிந்து, அதன் பயனைப் பெற்றுக்கொள்ள அதனை உணவுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்.

## யாழ்.கொத்தணி புனரமைப்பு!

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி 17.05.2012ல் மீண்டும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

சமாசத்தின் செயலாளரான திரு த.சிவலிங்கம் அவர்கள் கொத்தணியின் தலைவராகவும், செயலாளராக திரு மா.குணரத்தினம் அவர்களும், உபதலைவராக திரு சி.இரத்தினம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், கொத்தணிக்கான கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு க.மயூரன் அவர்கள் பொறுப்பாகவிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 60வது அகவையில்......

### வாழ்த்துகின்றோம்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்-வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்

**திரு பசுபதி சீவரத்தினம்**

அவர்கள் 02.05.2012ல் தனது 60வது அகவையில் கால் பதித்துள்ளமையையிட்டு, எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்களாகிய நாம் அவரை மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

## மாதாந்த .........

தேர்வை நடத்துவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

2012ம் ஆண்டுக்கான உப உணவுத் திட்டத்தின்கீழ், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ரொபிக்கு இதுவரை சுகாதார பரிசோதகரிடம் அனுமதி பெறப்படவில்லை எனவும், இவ்வாறான புதிய உற்பத்திகளின்போது சமூக, சமுதாய, பொருளாதார, அரசியல், துறைசார் அனுபவம் என்பவற்றினையும் கவனத்தில் கொண்டு புதிய உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கங்களின் உச்சமட்டப் பதவி தொடர்பில் ஆராயப்பட்ட போது, பொதுமுகாமையாளர்கள், கணக்காளர்கள், உற்பத்தி முகாமையாளர்கள், காசாளர் ஆகிய பதவி வெற்றிடங்களை மூன்று மாதங்களுக்குள் நிரப்பிக்கொள்ளுதல் வேண்டும் எனவும், இதற்கு தலைவர், நெறியாளர் குழு உறுப்பினர்களே தனித்தும் ஒருமித்தும் பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டது.

சங்கங்களால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் ஆராயப்பட்டபோது, இக்கொடுப்பனவுகள் ரூபா 2,000 ற்கு மேற்படலாகாது எனவும், அச்சுவேலி மத்திய கல்லூரி கூட்டுறவுச் சங்க புனரமைப்பு தொடர்பில் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கம் மூன்று கூறுவிலைகளைப் பெற்று ஒரு மாத காலத்தினுள் இவ்வேலைகளை முடிவுறுத்த வேண்டும் எனவும், சங்கங்களுக்கு அரச நிதி தேவைப்படின் தமது உற்பத்தி கருத்திட்டங்களைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன், சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு உறுப்பினர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக மலசலகூட வசதியற்ற உறுப்பினர்களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கலாம் எனவும், இதற்கான முன் அனுமதி பெறப்படவேண்டும் எனவும் இக்கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டது.

## இன்றைய ... 7ம் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி:** இறுதியாக ஒரு கேள்வி. எதிர்காலத்தில் இச்சங்கங்கள் எவ்வாறான திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** எதிர்காலத்தில் எமது சங்கங்கள் பனை வளத்திலிருந்து பெறப்படுகின்ற பதநீரைக்கொண்டு பல உப உணவுபொருட்களை உற்பத்தி செய்வதற்காக உயர் மட்ட நிறுவனங்களிடம், குறிப்பாக எமது சமாசம். பனை அபிவிருத்திச் சபை என்பவற்றின் ஊடாக நவீன தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று, "மது" என்ற வட்டத்திற்கு வெளியே இப்பொருட்களை அனைத்து மக்களும் விரும்பி நுகரக் கூடிய வகையில் தரமானதாகவும் சுவையானதாகவும் மாற்றியமைத்து சமூகத்தில் நன்மதிப்பை இச்சங்கங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சமாசத்தினால் வெளியிடப்படவுள்ள மலருக்கு கூட்டுறவு, அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து விளம்பரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| முழுப்பக்க விளம்பரம்-பலவர்ணம்(உட்பக்கம்) | - ரூபா | 10,000 |
| முழுப்பக்க விளம்பரம்-தனி வர்ணம் " | - ரூபா | 5,000 |
| அரைப்பக்க விளம்பரம்-தனி வர்ணம் " | - ரூபா | 3,000 |

தொடர்புகளுக்கு:-

**வடமாகாண பனை தென்னை வ.அபி.கூ. சங்கங்களின் சமாசம்**

52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி,யாழ். தொ.பே: 222 5072


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.